DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 64/2024**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : மங்கையர்கரசி
Father/ Husband Name : சரவணன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

எதிரி ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 17.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் விளாங்காட்டூரில் குடியிருந்து வருகிறேன். எதிரி என் மாமனார். கடந்த 22.12.2022ம் தேதி பகல் 03.00 மணியளவில் சொத்துப் பிரச்சினை காரணமாக எனது கணவர் சாட்சி சரவணன் சொத்துப் பிரச்சினையினால் வேலி போடவேண்டும் என்று எதிரியிடம் கேட்டார். அப்போது எதிரி பாதையில் நடக்ககூடாது, வேறு பாதை போட்டுக் கொள் என்று சொன்னார். அப்போது நான் வீட்டிற்குள் இருந்தேன், அதிகமாக சத்தம் கேட்டபோது நான் வெளியே வந்துப் பார்த்தேன். அப்போது என் மாமனார் கத்தியை வைத்து என் கணவரை முன்புறமும், பின்புறமும் வெட்டி விட்டார். பின்பு என் கணவரை உருட்டுக் கட்டையை வைத்து எதிரி அடித்துவிட்டார்.

2. சத்தம் கேட்டு அனைவரும் வந்துவிட்டார்கள். பிறகு ரம்யா ஆம்புலன்ஸில் வைத்து தேவகோட்டை அரசு மருத்துவமணைக்கு அனுப்பி வைத்தார். என் கணவர் மருத்துவ சிகிச்சையில் இருந்தபோது மருத்துவமணையில் வைத்து போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. என் மாமனாருக்கும் என் கணவருக்கும் ஏற்கனவே சொத்து தகராறு உள்ளது என்றால் சரிதான். அதனால் நாங்கள் எதிரியுடன் பேசுவது இல்லை என்றால் சரிதான். நாங்கள் பாதை கேட்கும் இடம் யாருடையது என்றால் எதிரியுடையது. தற்போது அந்த இடத்தில் தான் வாழ்ந்து வருகிறோமா என்றால் ஆமாம், தனீத் தனியாக குடியிருக்கிறோம். நாங்கள் மாமனாருக்கும், மாமியாருக்கும் செலவிற்கு பணம் கொடுப்பது உண்டா என்றால் தற்போது 4,5 வருடங்களாக கொடுப்பது இல்லை. எங்கள் வீட்டில் 2 தென்னை மரம் உள்ளது, அதில் ஆளுக்குகொன்று பிரித்துக் கொடுத்துவிட்டார்கள்.

2. அந்த 2 தென்னை மரத்திற்கு எதிரி தண்ணீர் பாய்ச்சுகிறாரா என்றால் ஆமாம். மரத்திற்கு தண்ணீர் பாய்ச்சியதால் என் மரத்திற்கு ஏன் தண்ணீர் பாய்ச்சுகிறாய் என்று என் கணவர் சென்று எதிரியிடம் கேட்டார் என்றால் சரிதான். அதனால் தான் சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவம் நடைபெறும் போது பக்கத்து வீட்டுக்காரர்கள் பார்த்தார்களா என்றால் இல்லை, வெட்டுப்பட்டு வெளியில் அழைத்து வரும்போது தான் வந்தார்கள்.

3. சம்பவத்தின் போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 7,8பேர் இருந்தார்கள். மேற்படி 7,8 நபர்களுக்கு சம்பவம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சாட்சிகள் ரம்யா, சுகன்யா, சுந்தராஜன் மற்றும் மூர்த்தி ஆகியோர் என் உறவினர் என்றால் சரிதான். அது தவிர ஊர்காரர்கள் யாராவது சாட்சிகளாக உள்ளார்களா என்றால் இல்லை. என் கணவருக்கும், எதிரிக்கும் வாக்குவாதம் நடக்கும்போது நான் வீட்டிற்குள் இருந்தேன் என்றால் சரிதான்.

4. எதிரி என் கணவரை கத்தியை வைத்து வெட்டியதை நான் நேரில் பார்த்தேனா என்றால் ஆமாம். கத்தி எவ்வளவு நீளம் இருக்கும் என்றால் சுமார் கை அளவு நீளம் இருக்கும். எதிரி பின்னாடி இருந்து தான் வெட்டினாரா என்றால் முதலில் முன்னாடி வெட்டினார், பிறகு என் கணவர் திரும்பும் போது பின்னால் வெட்டினார். வெட்டு பட்ட பின்னர் நான் என் கணவரை அழைத்து வந்தேன். ரம்யா தான் ஆம்புலனஸை வரவழைத்தார். என் கணவருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டா என்றால் முன்பு இருந்தது, தற்போது 7,8 மாதங்களாக இல்லை.

5. புகாரை யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். என் வீட்டுக்காரர் தென்னை மரத்திற்கு தண்ணீர் பாய்ச்சிய விவகாரத்தில் எதிரியின் வீட்டில் போய் சண்டை போட்டு எதிரியை என் கணவர் அறைந்தார் என்றும் அறைந்துவிட்டு வரும்போது குடிபோதையில் கீழே விழுந்ததில் காயம் ஏற்ப்பட்டுவிட்டது என்றும் அதைப்பயன்படுத்திக் கொண்டு பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இதே போன்று என் கணவர் எதிரியை வெட்டியதாக ஒரு வழக்கு உள்ளது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் வீட்டில் வந்து விசாரணை செய்தார்களா, மருத்துவமணையில் வைத்து விசாரணைய செய்தார்களா என்றால் இரண்டு இடத்திலுமே விசாரணை செய்தார்கள்.

6. என் கணவருடைய இரத்தம் படிந்த துணிகளை போலீசார் வாங்கிக் கொண்டார்களா என்றால் ஆமாம். கணவரை வெட்டியதாக சொல்லும் கத்தியை வாங்கிக் கொண்டார்களா என்றால் ஆமாம். இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 64/2024**

Deposition of witness for Prosecution அ.சா.2

Name : சரவணன்
Father/ Husband Name : மணி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 17.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் விளாங்காட்டூரில் குடியிருந்து வயலில் வேலை செய்துவருகிறேன். எதிரி என் அப்பா ஆவார். கடந்த 22.12.2022ம் தேதி மதியம் 03.00 மணியளவில் நான் வண்டிக்கு போய்விட்டு வரும்போது எதிரி என் மனைவியுடன் சண்டைப் போட்டுக் கொண்டிருந்தார். நான் எதிரியிடம் எனக்கு சொத்து பிரித்துக் கொடுங்கள் என்று கேட்டேன், அதனால் எதிரி என்னை வாளால் பின் தலையிலும், பிறகு முன் தலையிலும் வெட்டிவிட்டார். நான் மயங்கி விழுந்துவிட்டேன். அங்கிருந்தவர்கள் என்னை ஆம்புலன்ஸில் ஏற்றி தேவகோட்டை அரசு மருத்துவமணையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அதன்பிறகு சிவகங்கை அரசு மருத்துவமணைக்கு மேல் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. என் அப்பாவிற்கும், எனக்கும் சொத்துப் பிரச்சினையினால் பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் சொத்துப்பிரச்சினை உள்ளது, சில நேரங்களில் பேசிக்கொள்ளமாட்டோம். நான் என் அப்பாவின் இடத்தில் தான் குடியிருக்கிறேனா என்றால் இல்லை, அது எங்கள் பூர்வீக சொத்து, அது என் பெயரில் தான் உள்ளது. மேற்படி சொத்து என்

தாத்தாவின் சொத்தா என்றால் ஆமாம். மேற்படி சொத்தில் உள்ள 2 தென்னை மரங்களில் எனக்கு 1, எதிரிக்கு 1மாக ஒதுக்கிவிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். 2 தென்னை மரத்திற்கும் எதிரி தண்ணீர் பாய்ச்சுவார் என்றால் நான் வெளியில் வேலைக்கு சென்றுவிட்டால் எதிரி தண்ணீர் பாய்ச்சுவார்.

2. என்னுடைய மரத்திற்கு தண்ணீர் பாய்ச்சியது தொடர்பாக எதிரியிடம் போய் கேட்டததால் தான் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல, அதற்கும் சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை, சொத்துப்பிரச்சினையால் தான் சம்பவம் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்றது யார் வீட்டிற்கு முன்னால் ஏற்பட்டது என்றால் எங்கள் இருவர் வீட்டிற்கு இடையில் உள்ள பாதைக்கு அருகில் நடைபெற்றது. சம்பவம் ஏற்பட்ட போது நான் தான் எதிரியை அறைந்தேன் என்றால் அறையவில்லை, வாக்குவாதம் தான் நடைபெற்றது, எனக்கு சொத்து தரமாட்டேன் என்று அவருடைய 2வது மனைவி வாரிசுகளுக்கு தான் சொத்து தருவேன் என்று வாக்குவாதம் செய்தார்.

3. எதிரி வெட்டிய கத்தி எத்தனை அடி நீளம் இருக்கும் என்றால் சுமார் 3 அடி நீளம் இருக்கும். மேற்படி கத்தியை போலீசார் எடுத்துச் சென்று விட்டார்கள். என்னுடைய இரத்தம் படிந்த துணிகளை போலீசார் வாங்கிக் கொண்டார்களா என்றால் ஆமாம். புகாரை யார் எழுதினார்கள் என்றால் என் மனைவி தான் எழுதினார். போலீசார் வந்து என்னிடம் எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் தேவகோட்டை அரசு மருத்துவமணையிலும் பின்னர் சிவகங்கை அரசு மருத்துவமணையிலும் வைத்து விசாரணை செய்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டா என்றால முன்பு விஷேச சமயங்களில் சாப்பிடுவேன், தற்போது சாப்பிடுவது இல்லை.

4. சம்பவத்தின் போது மது அருந்திவிட்டு நான் தான் எதிரியை அறைந்தேன் என்றும் அறைந்துவிட்டு திரும்ப வரும்போது கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டு விட்டது என்றும் மேற்படி காயத்தை பயன்படுத்திக் கொண்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முன்விரோதத்தால் பொய்யாக வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.